**அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-600 006**

**முன்னிலை : சா. சேதுராமவர்மா,**

**இயக்குநர்**

**ந.க.எண். 020846 / எப் 1 / 2022** **நாள் : 08 .12. 2022**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 - 2022 -2023 -ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் — பள்ளி மாணவர்கள் பெயர்ப் பட்டியல் EMIS விவரங்களின் அடிப்படையில் தயாரித்தல் – மாணவர்கள் விவரங்களை பதிவேற்றம் செய்தல் மற்றும் தேர்வுக்கட்டணம் செலுத்துதல் குறித்து அறிவுரைகள் வழங்குதல் - தொடர்பாக.

**பார்வை:** அரசுத் தேர்வுகள் இயக்குநரின் இதே எண்ணிட்ட செயல்முறைகள், நாள்.9.11.2022. மற்றும் 30.11.2022

*****

**ஆணை** :

2022 -2023ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கான பள்ளி மாணவர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிப்பதற்கு, EMIS-ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள மாணவர்களின் தகவல்களுள், கீழ்க்காணும் தகவல்கள் பயன்படுத்தப்பட உள்ளன.

1. மாணாக்கரின் பெயர் (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
2. பிறந்த தேதி
3. புகைப்படம் (jpeg, jpg)
4. பாலினம்
5. வகைப்பாடு (சாதி அடிப்படையிலான வகைப்பாடு)
6. மதம்
7. மாணாக்கரின் பெற்றோர் / பாதுகாவலர் பெயர் (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
8. மாற்றுத் திறனாளி வகை மற்றும் சலுகைகள்
9. கைபேசி எண்
10. பாடத் தொகுப்பு - Group code (+1 **மாணவர்களுக்கு மட்டும்**)
11. பயிற்று மொழி (Medium of instruction)
12. மாணாக்கரின் வீட்டு முகவரி
13. பெற்றோரின் ஆண்டு வருமானம்

பள்ளி மாணவர்களின் மேற்குறிப்பிட்ட தகவல்களைப் பயன்படுத்தியே, 2022-2023-ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கான பள்ளி மாணவர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட உள்ளதால், அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும், **14.11.2022 முதல் 12.12.2022** வரையிலான நாட்களில் EMIS -ல் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள User ID மற்றும் Password-ஐ பயன்படுத்தி, EMIS Portal-ல் சென்று தங்களது பள்ளியில் பத்தாம் வகுப்பு மற்றும் பதினோராம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவர்களது மேற்குறிப்பிட்ட விவரங்கள் சரியாக உள்ளதா என்பதனையும், சரிபார்த்து, திருத்தங்கள் இருப்பின் உடன் திருத்தத்தினை மேற்கொள்ளுவதற்கும் பார்வைகளில் காணும் செயல்முறைகளின் வாயிலாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித்தலைமையாசிரியர்கள், **14.12.2022 (புதன் கிழமை) முற்பகல் 11.00 மணி முதல் 23.12.2022 (வெள்ளிக் கிழமை) வரையிலான நாட்களில்** அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளத்திற்குச் (www.dge.tn.gov.in) சென்று, இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படும் வழிமுறைகளை பின்பற்றி, மாணாக்கரது விவரங்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யவேண்டும்.

**பள்ளியினை பதிவு செய்தல்**

1. தலைமையாசிரியர்கள் மேற்குறிப்பிட்ட நாட்களில் அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளத்திற்குச் (www.dge.tn.gov.in) சென்று Online Portal for School and Educational Offices என்ற வாசகத்தினை click செய்ய வேண்டும்.

2. **கடந்த ஆண்டு அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளத்தில் பள்ளி விவரங்களை பதிவு செய்த பள்ளிகள்,User login ஐ பயன்படுத்தி பள்ளியின் பெயர் உள்ளிட்ட விவரங்களில் திருத்தம் இருப்பின், திருத்தங்களை மட்டும் மேற்கொள்ளலாம். தற்போது பள்ளித் தலைமையாசிரியராக பணியாற்றுபவரின் கைபேசி எண்ணினை கண்டிப்பாக பதிவேற்றம் செய்தல் வேண்டும்.**

3. **ஏற்கனவே பள்ளியினை அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளத்தில் பதிவு செய்யாத புதிய பள்ளிகள் மட்டும்** School registration என்ற வாசகத்தினை click செய்து தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள UDISE Code (EMIS User ID) மற்றும் Password-ஐ பயன்படுத்தி, தங்களது பள்ளியின் பெயர், பள்ளியின் வகை (Management), மின்னஞ்சல் முகவரி, மாவட்டம் போன்ற விவரங்களை பதிவு செய்யவேண்டும்.

4. School registration-ல் **உள்ள பள்ளியின் பெயரே மதிப்பெண் சான்றிதழில் அச்சிடப்படும் என்பதால் பள்ளியின் பெயரை ஆங்கிலத்திலும், தமிழிலும் சரியாக பதிவேற்றம் செய்யவேண்டும்.** பள்ளியின் வகையினையும் (Management) சரியாக குறிப்பிடவேண்டும்.

**குறிப்பு :**

School Registration முடிந்த பின்பு, District Level-ல் Approval வழங்கிட **வேண்டும். அதன்பின்னரே, அப்பள்ளி மாணாக்கர் விவரங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய இயலும்.**

<u>பெயர்ப் பட்டியல் தயாரித்தல்</u>

1. பள்ளித் தலைமையாசிரியர்கள் தங்களது பள்ளியில் பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டில் பயிலும் மாணவர்களது விவரங்களை பதிவு செய்ய அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளத்திற்குச் (www.dge.tn.gov.in) சென்று **Online Portal for School and Educational Offices** என்ற வாசகத்தினை click செய்ய வேண்டும்.

2. பின் School / Institution என்பதை click செய்ய வேண்டும். பிறகு தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள UDISE Code ( User ID) மற்றும் Password-ஐ பயன்படுத்தி Log in செய்ய வேண்டும்.

3. Log in செய்த பிறகு திரையில் தோன்றும் Pull Emis Data என்ற வாசகத்தை click செய்து, தங்களது பள்ளியில் பயிலும் பத்தாம் வகுப்பு / +1 மாணவர்களது விவரங்களை EMIS-ல் இருந்து Pull செய்ய வேண்டும்.

4. Log in செய்த பிறகு திரையின் வலது புறத்தில் உள்ள Notification என்ற வாசகத்திற்கு கீழே உள்ள Form Fill up HSE – XI என்ற வாசகத்தை click செய்து தங்கள் பயிலும் மேல்நிலை முதலாமாண்டு மாணாக்கரின் விவரத்தினை Apply என்பதை click செய்து ஒவ்வொரு மாணாக்கருக்கும் தனித்தனியே சரிபார்க்கவேண்டும்.

5. இதே போன்று Form Fill up SSLC என்ற வாசகத்தை click செய்து தங்கள் பயிலும் பத்தாம் வகுப்பு பயிலும் மாணாக்கரின் விவரத்தினை Apply என்பதை click செய்து ஒவ்வொரு மாணாக்கருக்கும் தனித்தனியே சரிபார்க்கவேண்டும்.

6. பார்வையில் காணும் செயல்முறையின் வாயிலாக EMIS Portal-ல் பதிவேற்றம் செய்த மாணவர்களின் விவரங்கள் DGE Portal-ல் Filling செய்த பின்னர் Apply Page-ஐ Click செய்து **மாணவர்களின் விவரங்களில் ஏதேனும் விடுபட்டிருந்தால் இப்பக்கத்தில் மேலே உள்ள GET LATEST EMIS DATA என்ற வாசகத்தை click செய்யவும்.**

7. மேலும், மாணவரின் பயிற்று மொழி, மாற்றுத் திறனாளித் தேர்வர்களது குறைபாட்டின் தன்மை, விருப்ப மொழிப்பாடம் (பத்தாம் வகுப்பிற்கு மட்டும்) அவர்கள் தேர்வெழுத கோரும் சலுகைகள் போன்ற கூடுதல் விவரங்களை சரியாக பதிவேற்றம் செய்யவேண்டும். சலுகை கோரும் மாற்றுத்திறனாளி மாணாக்கரது மாற்றுத்திறனாளி அடையாள அட்டை அல்லது உரிய மருத்துவரிடம் பெற்ற மருத்துவச்சான்றினை Scan செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும். **மாற்றுத்திறனாளித் தேர்வர்களுக்கு தேர்வெழுத வழங்கப்படும் சலுகைகள் குறித்த அரசாணை (இணைப்பு-2) இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.**

8. **பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வெழுதும் அனைத்து மாணவர்களும் பகுதி I-ல் தமிழ் மொழியினை மட்டுமே மொழிப்பாடமாக எழுத அனுமதிக்கப்படுவர்.**

9. தமிழகத்திலே பிற பாடத்திட்டத்தில் உதாரணத்திற்கு சி.பி.எஸ்.இ மற்றும் ஐ.சி.எஸ்.இ போன்ற பாடத்திட்டத்தில் பயின்று தமிழ்மாநிலப் பாடத்திட்டத்திற்கு (State Board) நேரடியாக 9 ஆம் வகுப்பு 10 ஆம் வகுப்பில் சேர்கின்ற மாணவர்களுக்கு மட்டும் **அரசாணை (நிலை) எண். 37, பள்ளிக் கல்வித் (க ஆ ப) துறை, நாள்.06.03.2018 -ன்படி 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் பகுதி – I இல் தமிழ் மொழிப்பாடம் எழுதுவதிலிருந்து 2023 – 2024 -ம் கல்வியாண்டு வரையில் விலக்களிக்கப்பட்டுள்ளது.**

10. **தமிழ் மற்றும் ஆங்கிலம் அல்லாத பிற மொழிகளை தாய்மொழியாகக் கொண்ட பத்தாம் வகுப்பு பயிலும் மாணவர்கள் பின்வரும் மொழிப்பாடத்தை <u>விருப்ப மொழிப்பாடமாக</u> பகுதி IV-ல் எழுத அனுமதிக்கப்படுவர். (Telugu / Malayalam / Kannada / Urdu / Hindi / Sanskrit / Arabic / French / Gujarathi) பகுதி IV-ல் பெறப்படும் <u>மதிப்பெண்கள்</u> தேர்வரின் தேர்ச்சிக்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.**

11. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழி தவிர இதர பயிற்று மொழிகளில் (Other than Tamil Medium) பயிலும் BC/BCM பிரிவுகளைச் சார்ந்த மாணவர்களது (தேர்வுக்கட்டண விலக்கு கோருபவர்கள் மட்டும்) பெற்றோரின் ஆண்டு வருமானத்தினை (ரூ.2,50,000/- க்கு குறைவாக உள்ளதா என்பதை) தேர்வு செய்யவேண்டும்.

12. மாணவர்களது அனைத்து விவரங்களையும் பதிவேற்றம் செய்த பின்னர், உறுதிமொழிப்படிவம் (Declaration form) மற்றும் மாணவரின் விவரங்கள் அடங்கிய பட்டியலை பதிவிறக்கம் செய்யவேண்டும்.

**<u>உறுதி மொழிப் படிவத்தில் மாணவர்களது / மாணவர்களின் பெற்றோர்களது கையொப்பம் பெறுதல் மற்றும் பெயர்பட்டியலில் திருத்தம் மேற்கொள்ளுதல்</u>**

1. உறுதிமொழி படிவத்தினை பதிவிறக்கம் செய்த பின்பு, உறுதிமொழிப் படிவத்தில் பூர்த்தி செய்துள்ள மாணவரின் பெயர், பிறந்த தேதி, புகைப்படம். மாணவரது பெற்றோரின் பெயர் (தாய்/ தந்தை/ பாதுகாவலர்) உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் சரிபார்க்கச் செய்து, அப்படிவத்தில் பள்ளி மாணவரின் கையெழுத்தினையும், பெற்றோரின் கையெழுத்தினையும் பெறுதல் வேண்டும். அச்சமயம் தேர்வுக் கட்டண விலக்கு பெற்ற மாணவர்கள் தவிர மற்ற மாணவர்களிடம் தேர்வுக் கட்டணத்தினை பெற்றுக் கொள்ளவேண்டும்.

2. **தேர்வெழுத சலுகை கோரும் மாற்றுத் திறனாளி மாணவர்களின் பெற்றோர்கள் பள்ளிக்கு வருகை தரும்பொழுது,** இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தினை (இணைப்பு-1 ) வழங்கி, மாணவர்கள் / பெற்றோர்களிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம், மாற்றுத் திறனாளிக்கான அடையாள அட்டையின் நகல் அல்லது மருத்துவக் குழுவின் பரிந்துரைக் கடிதம் ஆகியவற்றை பள்ளித் தலைமையாசிரியர் பெற்றுக் கொள்ள வேண்டும். (மருத்துவ சான்றிதழில் நோயின் தன்மை மற்றும் மாணவருக்கு வழங்க வேண்டிய சலுகை பற்றிய விவரம் ஆகியவை கண்டிப்பாக இடம் பெற்றிருக்க வேண்டும்). மாற்றுத் திறனாளி மாணவர்கள் விண்ணப்பத்தில் கோரியுள்ள சலுகைகளை மட்டுமே இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

   **குறிப்பு** : மாற்றுத் திறனாளிக்கான அடையாள அட்டை அல்லது மருத்துவக் குழுவின் பரிந்துரைக் கடிதத்தில் செல்லுபடியாகும் காலத்தை பார்த்து மாற்றுத் திறனாளி மாணவர்கள் விண்ணப்பத்தில் கோரியுள்ள சலுகைகளை இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

3. ஒவ்வொரு மாணவரின் உறுதிமொழிப் படிவத்திலும், சம்பந்தப்பட்ட வகுப்பாசிரியரும், பள்ளித் தலைமையாசிரியரும் அனைத்து விவரங்களும் சரியாக உள்ளதா என்பதனை ஒருமுறைக்கு இருமுறை உறுதி செய்து கொண்டு உறுதிமொழிப் படிவத்தில் கையொப்பமிட வேண்டும்.

4. தமிழில் உள்ள மாணவர்களின் பெயர், பெற்றோர்களின் பெயர் மற்றும் பள்ளியின் பெயரை திருத்தம் செய்ய வேண்டுமெனில், **ஏற்கனவே உள்ள பெயரை முழுவதும் நீக்கம்** (Delete) **செய்த பின்பு, அரசுத் தேர்வுகள் இணையதளத்தில் உள்ள Key board- ஐ தேர்வு செய்து, ஒவ்வொரு எழுத்தாக click செய்யவேண்டும்.**

5. பெயர்ப்பட்டியலின் அடிப்படையிலேயே மதிப்பெண் சான்றிதழ் அச்சிடப்படும் என்பதால், இப்பணியினை தலைமையாசிரியர் தமது நேரடி கவனத்தில் மிகுந்த பொறுப்புடனும், சிரத்தையுடனும் மேற்கொள்ள வேண்டும்.

6. **பதிவேற்றம் செய்யப்பட்ட மாணாக்கரின் விவரங்களில் தவறுகள் ஏதும் ஏற்படின் சம்பந்தப்பட்ட வகுப்பாசிரியர் மற்றும் பள்ளித் தலைமையாசிரியரே முழுப் பொறுப்பேற்க நேரிடும் என்பதுடன், அவர்கள் மீது துறை நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்.**

**குறிப்பு : அனைத்து திருத்தங்களும் அரசுத்தேர்வுகள் இயக்கக இணையதளத்தில் மட்டுமே பதிவேற்றம் செய்ய வேண்டும். கண்டிப்பாக எக்காரணங்கொண்டும் EMIS தளத்தில் பதிவேற்றம் செய்யக்கூடாது என்பதை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு முதன்மைக் கல்வி அலுவலர்கள் அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

பள்ளித் தலைமையாசிரியர்கள், மேற்குறிப்பிட்டவாறு மாற்றுத் திறனாளி மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம், **மாற்றுத் திறனாளிக்கான அடையாள அட்டையின் நகல் அல்லது மருத்துவக் குழுவின் பரிந்துரைக் கடிதம் ஆகியவற்றை** பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு மாணவர்கள் என தனித்தனியாகப் பிரித்து, பத்தாம் வகுப்பு மாணவர்களின் விண்ணப்பக் கட்டுகளை சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலகத்திலும், மேல்நிலை முதலாம் ஆண்டு மாணவர்களின் விண்ணப்பக் கட்டுகளை சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்திலும் 29.12.2022-**க்குள்** ஒப்படைக்கவேண்டும்.

**<u>தேர்வுக் கட்டணங்கள்</u>**

**பத்தாம் வகுப்பு பொதுத்தேர்விற்கான கட்டணம்**

| வ.எண் | மாணவர் வகை | தேர்வுக் கட்டணம் | மதிப்பெண் சான்றிதழ் கட்டணம் | சேவைக் கட்டணம் | மொத்தம் (ஒரு மாணவருக்கு) |
|---|---|---|---|---|---|
| 1 | பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வெழுதும் அனைத்து பள்ளி மாணவர்கள் | ரூ.100/- | ரூ.10/- | ரூ.5/- | ரூ.115/- |

**மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்விற்கான கட்டணம்**

| வ.எண் | மாணவர் வகை | தேர்வுக் கட்டணம் | மதிப்பெண் சான்றிதழ் கட்டணம் | சேவைக் கட்டணம் | மொத்தம் (ஒரு மாணவருக்கு) |
|---|---|---|---|---|---|
| 1 | செய்முறை கொண்ட பாடங்களடங்கிய பாடத் தொகுப்பில் பயில்வோர் | ரூ.200/- | ரூ.20/- | ரூ.5/- | ரூ.225/- |
| 2 | செய்முறை இல்லாத பாடங்களடங்கிய பாடத் தொகுப்பில் பயில்வோர் | ரூ.150/- | ரூ.20/- | ரூ.5/- | ரூ.175/- |

**<u>தேர்வுக் கட்டண விலக்கிற்கு தகுதியானோர்</u>:**

I. தமிழை பயிற்று மொழியாகக் கொண்டு (Tamil Medium) தேர்வெழுதும் அனைத்து பள்ளி மாணவர்களுக்கும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

II. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழி தவிர இதர பயிற்று மொழிகளில் (Other than Tamil Medium) பயிலும் பின்வரும் பிரிவுகளைச் சார்ந்த மாணவர்களுக்கு தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அ) | SC/SCA/ST மற்றும் SC Converts (SS) | பெற்றோருக்கான வருமானத்திற்கு உச்சவரம்பு ஏதும் இல்லை. |
| ஆ) | MBC/DC | |
| இ) | BC/BCM | - பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2,50,000/- க்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரத்துக்கு) மிகாமல் இருப்பவர்களுக்கு மட்டும் |

III. அனைத்துப் பள்ளிகளிலும் பயிலும் கண்பார்வையற்றோர் மற்றும் கேட்கும் / பேசும் திறனற்றோர்.

<u>மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகள்:</u>

மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் பயின்று பத்தாம் வகுப்பு / பதினோராம் வகுப்பு பொதுத் தேர்வெழுதும் மாணவர்கள் தேர்வுக் கட்டண விலக்கு பெறத் தகுதியுடையவர்கள் அல்லர்.

<u>தேர்வு க் கட்டணம் செலுத்துதல்</u>

1. மேற்குறிப்பிட்டவாறு தங்களது பள்ளியில் பத்தாம் வகுப்பு / பதினோராம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவர்களது விவரங்களையும் பதிவேற்றம் செய்தபின்னர், தேர்வுக்கட்டணம் செலுத்தவேண்டிய பள்ளி மாணாக்கரிடமிருந்து மட்டும் (தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டவர்களைத் தவிர்த்து) தேர்வுக்கட்டணத் தொகையினை பெற வேண்டும்,
2. பெறப்பட்ட தேர்வுக்கட்டணத்தை Log in செய்த பிறகு திரையின் வலது புறத்தில் உள்ள Notification என்ற வாசகத்திற்கு கீழே உள்ள Payment of HSE – XI/ Payment of SSLC என்ற வாசகத்தை click செய்து Credit Card / Debit Card / Net Banking பயன்படுத்தி ஆன்லைன் வாயிலாக பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாமாண்டு மாணவர்களின் தேர்வுக்கட்டணத்தினை **28.12.2022 -க்குள்** செலுத்தவேண்டும்..

**குறிப்பு: தேர்வுக்கட்டணம் செலுத்தும் முன்பு மாணவர்களின் விவரங்களில் திருத்தம் ஏதேனும் உள்ளதா என்பதை நன்கு உறுதி செய்துக் கொள்ள வேண்டும். ஏனெனில், தேர்வுக்கட்டணம் செலுத்திய பின்பு மாணவர்களின் விவரங்களில் திருத்தங்களை மேற்கொள்ள இயலாது.**

TML கட்டணம்:-

அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களும் 28.12.2022 **-க்குள்** 2022-2023 கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்விற்கான தேர்வு முடிவுகள் அடங்கிய அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலை (TML) **ஆன்லைன் மூலமாக பதிவிறக்கம் செய்து கொள்வதற்கான கட்டணம் ரூ.300/-ஐ** கீழ்காணும் வழிமுறைகளை பின்பற்றி செலுத்த வேண்டும். **அனைத்துப் பள்ளிகளும் (எந்த ஒரு பள்ளியும் விலக்கு இல்லாமல்) இக்கட்டணத்தினை செலுத்தவேண்டும்.**

1. www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று Log in செய்த பிறகு திரையின் வலது புறத்தில் உள்ள Notification என்ற வாசகத்திற்கு கீழே உள்ள TML Payment of HSE - XI / TML Payment of SSLC என்ற வாசகத்தை click செய்து Credit Card / Debit Card / Net Banking பயன்படுத்தி ஆன்லைன் வாயிலாக செலுத்தவேண்டும்.

இணையதளம் வாயிலாக மாணவர்களின் விவரங்களை பதிவேற்றம் செய்தல் மற்றும் தேர்வுக்கட்டணம் செலுத்துதல் தொடர்பான சந்தேகங்களுக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் (இணைப்பு-3) உள்ள தங்கள் மாவட்டத்தின் (இப்பணி தொடர்பான) ஒருங்கிணைப்பாளரை (Co-ordinator) தொடர்பு கொள்ளலாம்.

- **தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் :** 94983 83081<br>94983 83075

இணைப்பு:

1. தேர்வெழுத சலுகை கோரும் படிவம்
2. மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் குறித்த அரசாணை
3. ஒருங்கிணைப்பாளர்கள் பட்டியல்

**ஓம்/-**

**இயக்குநர்**

**பெறுநர்**

1. அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்
   ( முதன்மைக் கல்வி அலுவலர் வழியாக)
2. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
3. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
4. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் /

# படிவம் 1

## பத்தாம் வகுப்பு /மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வு மார்ச் /ஏப்ரல் 2023
## மாற்றுத் திறனாளி பள்ளி மாணவர்கள் – சலுகை கோரும் விண்ணப்பப் படிவம்

| | | |
|---|---|---|
| 1. | பெயர் மற்றும் பிறந்த தேதி | |
| 2. | வகுப்பு | |
| 3. | பள்ளியின் எண் மற்றும் பெயர் | |
| 4. | தேர்வு மைய எண் மற்றும் பெயர் | |
| 5. | பாடத் தொகுப்பு எண் | |
| 6. | தேர்வெழுதும் பாடங்கள் | |
| 7. | பயிற்று மொழி | |
| 8. | நோயின் தன்மை | |
| 9. | கோரப்படும் சலுகை | |
| 10. | மாற்றுத் திறனாளிக்கான அடையாள அட்டை அல்லது அசல் மருத்துவச் சான்று இணைக்கப்பட்டுள்ளதா? | |

மாணவரின் கையொப்பம்

மாணவரின் பெற்றோரின் கையொப்பம்

மாணவரின் வகுப்பு ஆசிரியர் கையொப்பம்.

தலைமையாசிரியர் சான்றொப்பம்

( பள்ளி முத்திரையுடன் )

குறிப்பு: இவ்விண்ணப்பத்துடன் மாற்றுத் திறனாளி அடையாள அட்டை நகல் அல்லது மருத்துவ சான்று கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும் (இரண்டு நகல்) மருத்துவச் சான்று இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

Government ... Chennai-600 006
08 APR 2022

100553

சுருக்கம்

பள்ளிக் கல்வி - அரசுத் தேர்வுகள் இயக்ககம் - மேல்நிலை / இடைநிலை / எட்டாம் வகுப்பு (தனித்தேர்வர்) / தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வு மற்றும் தொழில்நுட்பத்தேர்வு ஆகிய பொதுத்தேர்வுகள் எழுதும் மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கு மத்திய கல்வி வாரியத்தால் வழங்கப்படும் சலுகைகள் போன்று சலுகைகள் வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வி(அ.தே.)த்துறை

அரசாணை(நிலை) எண்.62

நாள் : 25.03.2022
திருவள்ளுவர் ஆண்டு 2053
பிலவ வருடம், பங்குனி - 11
படிக்கப்பட்டவை:

1. அரசுக் கடித எண்.8244/வி1/2006-2, நாள் 18.04.2006
2. அரசாணை (நிலை) எண்.28, ப.க(வி1)த்துறை, நாள் 10.02.2010
3. அரசாணை (நிலை) எண்.2, ப.க(வி1)த்துறை, நாள் 07.01.2012
4. அரசாணை (நிலை) எண்.23, ப.க(வி1)த்துறை, நாள் 11.02.2013
5. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களின் கோ.எண்.004493/LO/2021-ல் பிறப்பிக்கப்பட்ட 09.07.2021-ம் நாளிட்ட நீதிமன்ற ஆணை
6. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடித ந.க.எண்.100864/எப்1.2021, நாள் 12.08.2021 (ம) 04.01.2021.
7. மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர் அவர்களின் கடித Rc. எண்.2277/B2/2021, நாள் 17.09.2021
8. பள்ளிக் கல்வி ஆணையரின் கடித ந.க.எண்.029382/அ5/இ4/2021, நாள் 23.09.2021

---

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசுக் கடிதத்தில் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கத் தேவை ஏற்படாத பாடங்களை தேர்ந்தெடுத்து படிக்க ஊக்குவிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளுமாறு பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

2. மேலே இரண்டாவது மற்றும் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள, ஆறு வகையான மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கு மட்டும் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் நடத்தப்படும் தேர்வுகளில் சொல்வதை எழுதுபவர், கூடுதல் ஒரு மணி நேரம்,

மொழிப்பாட விலக்கு உள்ளிட்ட சலுகைகள் வழங்கி, ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன:

i. கண் பார்வையற்றோர்

ii. காது கேளாத மற்றும் வாய் பேச இயலாதோர்,

iii. எதிர்பாராத விபத்துகளால் உடல் ஊனமுற்று தேர்வு எழுத இயலாதோர், பாரிச வாயு போன்ற நோயால் பாதிக்கப்பட்டோர் மற்றும் எதிர்பாராத விபத்தினால் கைமுறிவு ஏற்பட்டோர்

iv. மனநலம் குன்றியோர்

v. டிஸ்லெக்சியா குறைபாடுடையோர்,

vi. நரம்பியல் குறைபாடுடையோர்

3. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பத்தாம் வகுப்பு செய்முறைத் தேர்வு விலக்கு கோரும் மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கு மட்டும் செய்முறைத் தேர்வு விலக்கு சலுகை வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. மேல்நிலைத் தேர்வெழுதும் மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கு செய்முறைத் தேர்வு விலக்கு வழங்கப்படுவதில்லை என்ற காரணத்தால், பார்வையற்றோருக்கான தேசிய சங்கத்தின் தமிழ்நாடு கிளையால், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் நீதிமன்றத்தால் மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு தேர்வெழுதும் மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கு செய்முறைத் தேர்வின் போது, ஆய்வக உதவியாளரை நியமனம் செய்வது தொடர்பாக தேவையான விதிமுறைகளை வகுக்குமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

5. மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், மேல்நிலை / இடைநிலை / எட்டாம் வகுப்பு (தனித்தேர்வர்) / தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வு மற்றும் தொழில்நுட்ப தேர்வு ஆகிய பொதுத்தேர்வுகளை எழுதும் மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கு மாற்றுத் திறனாளிகள் உரிமைச் சட்டம் 2016-ன்படி, மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் அலுவலகக் குறிப்பில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதலைப் பின்பற்றி, மத்திய பள்ளிக் கல்வி வாரியத்தால் (CBSE) வழங்கப்படுவதைப் போன்று, மாநில பொதுத் தேர்வெழுதும் அனைத்து மாற்றுத் திறனாளி தேர்வர்களுக்கும் அவர்களுடைய குறைபாட்டின் தன்மைக்கேற்ப நிபந்தனைகளுடன் கூடிய சலுகைகளை பட்டியலிட்டு, இனி வருங்காலங்களில் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் பொதுத்தேர்வுகள் நடத்தப்படும் போது வழங்கலாம் என தெரிவித்து அதன்மீது அரசுத் தேர்வுகள் இயக்குநர் ஆணை வேண்டியுள்ளார். இதனையே மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர் மற்றும் பள்ளிக் கல்வி ஆணையர் ஆகியோர் மேலே 7-வது மற்றும் 8-வதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் பரிந்துரை செய்துள்ளனர்.

6. பள்ளிக்கல்வி ஆணையர் மற்றும் மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநர் ஆகியோரின் பரிந்துரையுடன் பெறப்பட்ட அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கோரிக்கையினை பரிசீலித்த அரசு, அதனை ஏற்று, மாற்றுத் திறனாளிகள் உரிமைச் சட்டம் 2016 மற்றும் மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் வழிகாட்டுதல் ஆகியவற்றை பின்பற்றி, மத்திய பள்ளிக் கல்வி வாரியத்தால் (CBSE) மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளைப் போன்று, இனி வருங்காலங்களில் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் நடத்தப்படும் நடைமுறையில் உள்ள மேல்நிலை / இடைநிலை / எட்டாம் வகுப்பு (தனித்தேர்வர்) ஆகிய பொதுத்தேர்வுகள் மற்றும் தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வு, தொழில்நுட்ப தேர்வுகள் ஆகியவற்றை எழுதும் இவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கு அவர்களுடைய குறைபாட்டின் தன்மைக்கேற்ப குறிப்பிடப்பட்டுள்ள சலுகைகளை, வழங்கி பொதுத்தேர்வுகள் நடத்திட அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அனுமதி வழங்கி ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>

அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை - 6.
மெட்ரிகுலேஷன் பள்ளி இயக்குநர்,
சென்னை -6.
பள்ளிக் கல்வி ஆணையர்,
சென்னை -6.
மாற்றுத் திறனாளி நல இயக்குநர்,
சென்னை - 5

<u>நகல்</u>

மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை -9
மாற்றுத் திறனாளி நலத்துறை,
சென்னை - 9
இருப்புக்கோப்பு / உதிரி கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

25-3-22

பிரிவு அலுவலர்

அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை - 600006

<u>மேற்குறிப்பு</u>

ந.க. எண்.100864/F1/2021 நாள். 08.04.2022

அரசாணை (நிலை) எண். 62, பள்ளிக் கல்வி (அதே)த்துறை, நாள். 25.03.2022 - ன் நகல் தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும் வழங்கப்படுகிறது.

[signature]
இணை இயக்குநர்(பணியாளர்)

8/4/22 8/4/22.

<u>பெறுநர்</u>

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.
· அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
· சம்பந்தப்பட்ட பிரிவுகள் (அலுவலகம்).

அரசாணை(நிலை)எண்.62, ப.க(அ.தே)த்துறை, நாள் 25.03.2022-ன் இணைப்பு

| வ. எண் | குறைபாட்டின் தன்மை | குறைபாட்டிற்கான குறியீடு | ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் சலுகைகள் | மத்திய பள்ளிக் கல்வி வாரியத்தைப் பின்பற்றி வழங்க பரிந்துரைக்கும் சலுகைகள் |
|---|---|---|---|---|
| 01 | உடல் குறைபாடு – உடல் இயக்கக் குறைபாடு (Physical Disability - Locomotor Disability) | LD | **எதிர்பாராத விபத்துக்களால் உடல் ஊனமுற்று தேர்வு எழுத இயலாதோர், பாரிச வாயு போன்ற நோயால் பாதிக்கப்பட்டோர் மற்றும் எதிர்பாராத விபத்தினால் கைமுறிவு ஏற்பட்டோர்**<br>1. தேர்வெழுத சொல்வதை எழுதுபவர் நியமனம்.<br>2. தேர்வெழுத கூடுதல் ஒரு மணிநேரம்.<br>3. தரைத்தளத்தில் தேர்வெழுத அனுமதி. | 1. ஏதேனும் ஒரு மொழிப்பாடம் எழுதுவதிலிருந்து விலக்கு<br>2. சொல்வதை எழுதுபவர் நியமனம் (கை செயலிழப்பு ஏற்பட்டவர்களுக்கு மட்டும்)<br>3. ஈடுசெய் நேரம் (Compensatory Time)<br>4. தரைத்தளத்தில் தேர்வெழுத அனுமதி<br>5. செய்முறை தேர்வின்போது ஆய்வக உதவியாளர் நியமனம்<br>**குறிப்பு:**<br>மத்தியப் பள்ளிக் கல்வி வாரியத்தால் நடத்தப்படும் தேர்வுகளுக்கு ஆய்வக உதவியாளர் நியமன சலுகை வழங்கப்படவில்லை .இருப்பினும், 29.08.2018 நாளிட்ட மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் அலுவலகக்குறிப்பில் மாற்றுத் திறனாளிகளுக்கு தேர்வுகளின் போது சலுகை வழங்குதல் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதலைப் பின்பற்றி, ஆய்வக உதவியாளர் நியமனம் செய்யலாம்.<br>6. மருத்துவரின் பரிந்துரையின் படி தேர்வெழுதும் போது தேவைப்படும் சாதனங்களைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி. |
| | i. உடல் இயக்கக் குறைபாடு (Locomotor Disability) | | | |
| | ii. தொழுநோயிலிருந்து குணமடைந்தோர் (Leprosy Cured) | LC | | |
| | iii. மூளை முடக்குவாத பாதிப்பு (Cerebral Palsy) | CP | | |
| | iv. குள்ளத்தன்மை (Dwarfism) | DWF | | |
| | v. தசைச் சிதைவு நோய் (Muscular Dystrophy) | MUD | | |
| | vi. அமில வீச்சால் பாதிக்கப்பட்டோர் (Acid Attack Victims) | AC | | |
| 02. | உடல் குறைபாடு – பார்வைக் குறைபாடு (Physical Disability – Visual Impairment) | | **கண் பார்வையற்றோர்**<br>1. தேர்வெழுத சொல்வதை எழுதுபவர் நியமனம்.<br>2. தேர்வெழுத கூடுதல் ஒரு மணிநேரம்.<br>3. தரைத்தளத்தில் தேர்வெழுத அனுமதி.<br>4. தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு. | 1. ஏதேனும் ஒரு மொழிப்பாடம் எழுதுவதிலிருந்து விலக்கு<br>2. சொல்வதை எழுதுபவர் நியமனம்<br>3. ஈடுசெய் நேரம் (Compensatory Time)<br>4. தரைத்தளத்தில் தேர்வெழுத அனுமதி.<br>5. **செய்முறை தேர்வின்போது ஆய்வக உதவியாளர் நியமனம்**<br>6. மருத்துவரின் பரிந்துரையின்படி தேர்வெழுதும் போது தேவைப்படும் சாதனங்களைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி.<br>7. தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு. |
| | i. கண் பார்வையின்மை (Blindness) | VI | | |
| | ii. பார்வைக் குறைபாடு (Low Vision) | LV | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 03. | உடல் குறைபாடு - செவித்திறன் குறைபாடு (Physical Disability - Hearing Impairment) | | **காது கேளாத மற்றும் வாய் பேச இயலாதோர்**<br>1. இரு மொழிப் பாடங்களில் ஏதேனும் ஒரு மொழிப்பாடம் தேர்வு எழுத விலக்கு அளித்தல்.<br>2. தேர்வெழுத கூடுதல் ஒரு மணிநேரம்.<br>3. தரைத்தளத்தில் தேர்வெழுத அனுமதி.<br>4. தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு. | 1. ஏதேனும் ஒரு மொழிப்பாடம் எழுதுவதிலிருந்து விலக்கு<br>2. ஈடுசெய் நேரம் (Compensatory Time)<br>3. தரைத்தளத்தில் தேர்வெழுத அனுமதி.<br>4. **செய்முறை தேர்வின்போது ஆய்வக உதவியாளர் நியமனம்**<br>5. மருத்துவரின் பரிந்துரையின்படி தேர்வெழுதும் போது தேவைப்படும் சாதனங்களைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி.<br>6. தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு. |
| | i. காது கேளாமை (Deafness) | HI | | |
| | ii. செவித்திறன் குறைபாடு (Hard of Hearing) | HH | | |
| 04. | உடல் குறைபாடு - பேச்சு மற்றும் மொழித்திறன் குறைபாடு (Physical Disability - Speech and Language Disability) | SPLAND | **காது கேளாத மற்றும் வாய் பேச இயலாதோர்**<br>1. இரு மொழிப் பாடங்களில் ஏதேனும் ஒரு மொழிப்பாடம் தேர்வு எழுத விலக்கு அளித்தல்.<br>2. தேர்வெழுத கூடுதல் ஒரு மணிநேரம்.<br>3. தரைத்தளத்தில் தேர்வெழுத அனுமதி.<br>4. தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு. | 1. ஏதேனும் ஒரு மொழிப்பாடம் எழுதுவதிலிருந்து விலக்கு<br>2. சொல்வதை எழுதுபவர் (அல்லது) வினாத்தாள் வாசிப்பவர் நியமனம்<br>3. ஈடுசெய் நேரம் (Compensatory Time)<br>4. தரைத்தளத்தில் தேர்வெழுத அனுமதி.<br>5. மருத்துவரின் பரிந்துரையின்படி தேர்வெழுதும் போது தேவைப்படும் சாதனங்களைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி.<br>6. தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு. |
| 05. | அறிவு சார் குறைபாடு (Intellectual Disability) | | டிஸ்லெக்சியா குறைபாடு<br>1. தேர்வெழுத கூடுதல் ஒரு மணி நேரம்<br>2. கால்குலேட்டர் பயன்படுத்த அனுமதி.<br>3. கிளார்க் அட்டவணை பயன்படுத்த அனுமதி.<br>4. கேள்வித்தாளை | 1. ஏதேனும் ஒரு மொழிப்பாடம் எழுதுவதிலிருந்து விலக்கு<br>2. சொல்வதை எழுதுபவர் (அல்லது) வினாத்தாள் வாசிப்பவர்(அல்லது) Adult Prompter நியமனம்<br>3. ஈடுசெய் நேரம் (Compensatory Time) |
| | i. அறிவு சார் குறைபாடு (Intellectual Disability) | ID | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | ii குறிப்பிட்ட கற்றல் குறைபாடு (Specific Learning Disability)<br>• படிக்க இயலாமை (Dyslexia)<br>• எழுத முடியாமை (Dysgraphia)<br>• கணிதக் குறைபாடு (Dyscalculia)<br>• செயல் திறன் குன்றல் (Dysprasia)<br>Developmental Aphasia | SLD | படித்துக்காட்ட அல்லது சொல்வதை எழுத ஆசிரியரை நியமிக்க அனுமதி (இரண்டில் ஏதேனும் ஒரு சலுகை அன்னாரின் கோரிக்கை படி).<br>5. ஏதேனும் ஒரு மொழிப்பாடம் எழுதுவதிலிருந்து தவிர்ப்பு வழங்குதல்.<br>6. மொழி அல்லாத பிற பாடங்களை திருத்தும் போது எழுத்து பிழைக்கென மதிப்பெண் குறைக்காமல் பாடப் பொருளை மட்டும் கணக்கில் கொண்டு மதிப்பெண் அளித்தல்.<br>7. பள்ளியில் முறையாக பயின்றோ அல்லது பள்ளியில் முறையாக பயிலாமல் தனிப்பட்ட முறையில் ஆசிரியரிடம் சிறப்பு பயிற்சி பெற்ற தனித் தேர்வராக பொதுத் தேர்வு எழுத அனுமதித்தல்.<br>8. தரைத்தளத்தில் தேர்வெழுத அனுமதி. | 4. தரைத்தளத்தில் தேர்வெழுத அனுமதி.<br>5. கணிதக் குறைபாடு (Dyscalculia) உள்ளவர்களுக்கு மட்டும் தேர்வின் போது கணிப்பான்(Calculator) பயன்படுத்த அனுமதி |
| | iii புற உலக சிந்தனை குறைபாடு (Autism Spectrum Disorder) | ASD | | |
| 06. | மனநலம் சார்ந்த குறைபாடு - மனநலம் பாதிப்பு (Mental Behaviour -Mental illness) | MI | **மனநலம் குன்றியோர்**<br>1. இருமொழிப் பாடங்களில் ஏதேனும் ஒரு மொழிப் பாடம் தேர்வு எழுத விலக்கு அளித்தல்.<br>2. தேர்வெழுத கூடுதல் ஒரு மணிநேரம்<br>3. தேர்வெழுத சொல்வதை எழுதுபவர் நியமனம்.<br>4. தரைத்தளத்தில் தேர்வெழுத அனுமதி. | 1. ஏதேனும் ஒரு மொழிப்பாடம் எழுதுவதிலிருந்து விலக்கு<br>2. சொல்வதை எழுதுபவர் (அல்லது) வினாத்தாள் வாசிப்பவர் (அல்லது) Adult Prompter நியமனம்<br>3. ஈடுசெய் நேரம் (Compensatory Time)<br>4. தரைத்தளத்தில் தேர்வெழுத அனுமதி. |
| 07 | நாள்பட்ட நரம்பியல் குறைபாடுகள் (Disability caused due to Chronic Neurological Conditions) | | **நரம்பியல் கோளாறு**<br>1. தேர்வெழுத கூடுதல் 1 மணி நேரம்.<br>2. கால்குலேட்டர் பயன்படுத்த அனுமதி. | 1. ஏதேனும் ஒரு மொழிப்பாடம் எழுதுவதிலிருந்து விலக்கு<br>2. சொல்வதை எழுதுபவர் (அல்லது) வினாத்தாள் வாசிப்பவர் (அல்லது) Adult |

| | | | | |
|---|---|---|---|---|
| | i. நாள்பட்ட நரம்பியல் குறைபாடு (Chronic Neurological Conditions) | CNC | 3. கிளார்க் அட்டவணை பயன்படுத்த அனுமதி.<br>4. கேள்வித்தாளை படித்துக்காட்ட அல்லது சொல்வதை எழுத ஆசிரியரை நியமிக்க அனுமதி (இரண்டில் ஏதேனும் ஒரு சலுகை அன்னாரின் கோரிக்கை படி).<br>5. ஏதேனும் ஒரு மொழிப்பாடம் எழுதுவதிலிருந்து தவிர்ப்பு வழங்குதல்.<br>6. மொழி அல்லாத பிற பாடங்களை திருத்தும் போது எழுத்து பிழைக்கென மதிப்பெண் குறைக்காமல் பாடப் பொருளை மட்டும் கணக்கில் கொண்டு மதிப்பெண் அளித்தல்.<br>7. பள்ளியில் முறையாக பயின்றோ அல்லது பள்ளியில் முறையாக பயிலாமல் தனிப்பட்ட முறையில் ஆசிரியரிடம் சிறப்பு பயிற்சி பெற்ற தனித் தேர்வராக பொதுத் தேர்வு எழுத அனுமதித்தல்.<br>8. கணினி மற்றும் வரைபடம் பயன்படுத்த அனுமதித்தல்<br>9. தரைத்தளத்தில் தேர்வெழுத அனுமதி. | Prompter நியமனம்<br>3. ஈடுசெய் நேரம் (Compensatory Time)<br>4. தரைத்தளத்தில் தேர்வெழுத அனுமதி.<br>5. மருத்துவரின் பரிந்துரையின்படி தேர்வெழுதும் போது தேவைப்படும் சாதனங்களைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி |
| | ii. தண்டுவட மரப்பு நோய் (Multiple Sclerosis) | MS | | |
| | iii. நடுக்கு வாதம் (Parkinson's Disease) | PD | | |
| | iv. குருதி உறையாமை (Haemophilia) | HE | | |
| | v. இரத்த அழிவு சோகை (Thalassemia) | TH | | |
| | vi. அரிவாளணு இரத்த சோகை (Sickle Cell Disease) | SCD | | |
| 08. | பன்முகக் குறைபாடுகள் (பார்வையின்மையோடு செவித்திறன் குறைபாடு உட்பட) (Multiple Disabilities including Deafblindness) | MD | --- | 1. ஏதேனும் ஒரு மொழிப்பாடம் எழுதுவதிலிருந்து விலக்கு<br>2. சொல்வதை எழுதுபவர் நியமனம்<br>3. ஈடுசெய் நேரம் (Compensatory Time)<br>4. தரைத்தளத்தில் தேர்வெழுத அனுமதி |

I. **<u>தேர்வெழுதும் போது வழங்கப்படும் சலுகைகள் குறித்த கூடுதல் விவரங்கள்</u>**

i. <u>ஈடுசெய்நேரம்</u>

மாற்றுத்திறனாளிகள் தேர்வெழுதும் நேரம் 3 மணி நேரம் எனில், ஈடுசெய்நேரம் 60 நிமிடங்கள் எனவும், 2½ மணி நேரம் எனில் ஈடுசெய்நேரம் 50 நிமிடங்கள் எனவும் ஒவ்வொரு 1 மணி நேரத்திற்கும் 20 நிமிடங்கள் என்ற வீதத்தில் ஈடுசெய் நேரம் வழங்கப்படும்.

II. **<u>சொல்வதை எழுதுபவர் / Prompter / வினாத்தாள் வாசிப்பவர் / ஆய்வக உதவியாளர் நியமனம்:-</u>**

- மாற்றுத் திறனாளித் தேர்வர்கள் விருப்பத்தின் பேரில் தங்களுக்கு தெரிந்த நபரையோ அல்லது கல்வித் துறையால் நியமிக்கப்படும் நபரையோ சொல்வதை எழுதுபவராக (Scribe) / Prompter/ வினாத்தாள் வாசிப்பவராக / ஆய்வக உதவியாளராக நியமனம் செய்யக் கோரலாம்.
- தேர்வருக்கு தெரிந்த நபர் சொல்வதை எழுதுபவராக (Scribe) நியமிக்கப்படும் நேர்வுகளில், சொல்வதை எழுதுபவரின் கல்வித் தகுதி தேர்வெழுதும் வகுப்பிற்கான கல்வித் தகுதியை விட சற்றுக் குறைவாக இருத்தல் வேண்டும்.
- கல்வித்துறையால் நியமனம் செய்யப்படும் சொல்வதை எழுதுபவர் (Scribe) / Prompter/ வினாத்தாள் வாசிப்பவர் / ஆய்வக உதவியாளர், அரசாணை (நிலை) எண் 54, பள்ளிக் கல்வி (ஜிஇ1) துறை, நாள் 29.02.2016-ல் வழங்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி நியமனம் செய்யப்படுவார்.
- செய்முறைத் தேர்விற்கு ஆய்வக உதவியாளராக நியமனம் செய்யப்படும் நபர் சம்பந்தப்பட்ட பாடத்தில் இளநிலை பட்டம் பெற்ற பட்டதாரி ஆசிரியராக இருப்பார்.

III. **<u>செய்முறைத் தேர்விற்கான சலுகை</u>**

**<u>i. பத்தாம் வகுப்பு செய்முறைத் தேர்வு</u>**

- அரசாணை (நிலை) எண்.23, பள்ளிக் கல்வி (வி1) துறை, நாள்.11.02.2013-ன் படி, பத்தாம் வகுப்பு தேர்வெழுதும் மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கு மட்டும் செய்முறைத் தேர்வு விலக்கு அளிக்கும் நடைமுறையினை தொடர்ந்து பின்பற்றலாம்.

**<u>ii. மேல்நிலை வகுப்பு செய்முறைத் தேர்வு</u>**

- மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வுகளை எழுதும் உடல் இயக்கக் குறைபாடு, பார்வைக் குறைபாடு மற்றும் செவித்திறன் குறைபாடுள்ள மாற்றுத்

திறனாளித் தேர்வர்களது விருப்பத்தின் பேரில், செய்முறை தேர்வின் போது ஆய்வக உதவியாளர் நியமனம் செய்யப்படுவார்.

- உடல் இயக்கக் குறைபாடு, பார்வைக் குறைபாடு மற்றும் செவித்திறன் குறைபாடுள்ள மாற்றுத் திறனாளித் தேர்வர்களது விருப்பத்தின் பேரில், இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியியல் பாடங்களில் மட்டும், செய்முறைத் தேர்வுக்கு பதிலாக செய்முறை தொடர்பான கொள்குறி வகை வினாக்கள் (Multiple Choice Questions) அடங்கிய வினாத்தாட்கள் வழங்கப்படும்.

IV. **<u>தேர்வெழுதும் போது அனுமதிக்கப்படும் சாதனங்கள்</u>**

- மருத்துவரின் பரிந்துரையின்படி உருப்பெருக்கி, சிறிய வீடியோ உருப்பெருக்கி (Portable Video Magnifier), பேசும் கணிப்பான் (Talking Calculator), பிரெய்லி வரைபடம், டெய்லர் பலகை (Tailor Frame), அபாகஸ் போன்ற சாதனங்களைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்படும். அவசியம் கணினி அனுமதிக்க வேண்டிய நேர்வில் மட்டும், அதுவும் தேர்வு மையத்தில் உள்ள கணினியை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

V. **<u>தேர்வுக் கட்டண விலக்கு:-</u>**

- அரசாணை (நிலை) எண்.2194, பள்ளிக் கல்வித் துறை, நாள்.10.10.1980 மற்றும் அரசாணை (நிலை) எண்.131, பள்ளிக் கல்வித் துறை, நாள்.24.01.1980-ன் படி கண்பார்வையற்றோர் மற்றும் காது கேளாத மற்றும் வாய் பேச இயலாத மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கு தேர்வுக் கட்டண விலக்கு வழங்கப்படும் நடைமுறையினைத் தொடர்ந்து பின்பற்றலாம்.

**<u>மேற்கண்ட குறைபாடுள்ள தேர்வர்கள் மேற்காண் சலுகைகளை பெறுவதற்கு பின்பற்ற வேண்டிய நிபந்தனைகள்</u>**

- பார்வையின்மை / பார்வைத் திறன் குறைபாடுள்ள தேர்வர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசு கண்மருத்துவரிடம் (Opthomologist) உரிய மருத்துவச் சான்றிதழைப் பெற்று சமர்ப்பித்திடல் வேண்டும்.
- செவித்திறன் குறைபாடு / பேச்சு மற்றும் மொழித்திறன் குறைபாடுள்ள தேர்வர்கள் தங்களின் குறைபாட்டின் தன்மை குறித்து, பதிவு செய்யப்பட்ட காது, மூக்கு மற்றும் தொண்டை நிபுணர் (ENT Specialist) அல்லது அரசு மருத்துவ அலுவலரால் (Civil Surgeon நிலையில் உள்ளவருக்கு குறையாமல்) அண்மையில் வழங்கப்பட்ட மருத்துவச் சான்றிதழைப் பெற்று இருத்தல் வேண்டும்.
- உடல் இயக்கக் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட தேர்வர்கள் பதிவு பெற்ற அரசு மருத்துவரிடம் தக்க மருத்துவச் சான்றிதழை பெற்றிடல் வேண்டும்.

- மனநலம் பாதிக்கப்பட்ட தேர்வர்கள், நரம்பியல் நிபுணர் (Neurologist) அல்லது அரசு மருத்துவ அலுவலரிடம் (Civil Surgeon நிலையில் உள்ளவருக்கு குறையாமல்) மனநலம் குன்றியதற்கான சான்றிதழைப் பெற்றிடல் வேண்டும்.
- அறிவுசார் குறைபாடு / குறிப்பிட்ட கற்றல் குறைபாடு / நரம்பியல் குறைபாடு உள்ள மாணவர்களுக்கு அத்தகைய குறைபாடுகளுக்கான மருத்துவர்கள் / மனோதத்துவ நிபுணர்கள் அடங்கிய மருத்துவ குழு வழங்கும் சான்றிதழைப் பெற்றிடல் வேண்டும்.
- குறிப்பிட்ட கற்றல் குறைபாடு உள்ள தேர்வர்கள், தேசிய அளவில் அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள் அல்லது தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல ஆணையகத்தில் அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள் வழங்கும் சான்றிதழை சமர்ப்பித்தும் தேர்வெழுத சலுகை கோரி விண்ணப்பிக்கலாம்.
- மாற்றுத் திறனாளிகளுக்கான Unique Disability Identity Card-ன் நகலை சமர்ப்பித்தும் தேர்வெழுத சலுகை கோரி விண்ணப்பிக்கலாம். பள்ளி மாணவர்களைப் பொறுத்தவரை, தேர்வெழுத சலுகை கோரும் விண்ணப்பத்துடன் மருத்துவச் சான்றிதழினை இணைத்து அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் நிர்ணயிக்கப்படும் கால வரையறைக்குள், பள்ளித் தலைமை ஆசிரியர்கள் வாயிலாக +2 மாணவர்கள் எனில் முதன்மைக் கல்வி அலுவலருக்கும், பத்தாம் வகுப்பு (எஸ்.எஸ்.எல்.சி) மாணவர்கள் எனில் மாவட்டக் கல்வி அலுவலருக்கும் சமர்ப்பித்திடல் வேண்டும்.
- தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வெழுத சலுகை கோரும் விண்ணப்பத்துடன் மருத்துவச் சான்றிதழினை இணைத்து அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் நிர்ணயிக்கப்படும் கால வரையறைக்குள், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வரிடம் சமர்ப்பித்திடல் வேண்டும்.
- எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலைப் பொதுத் தேர்விற்கு விண்ணப்பிக்கும் தனித் தேர்வர்கள், சேவை மையத்தில் தேர்வெழுத விண்ணப்பிக்கும் பொழுது, தேர்வெழுத சலுகை கோரும் விண்ணப்பம் மற்றும் மருத்துவச் சான்றிதழினை சேவை மையத்தில் வழங்குதல் வேண்டும்.

காகர்லா உஷா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

25-3-22

பிரிவு அலுவலர்.

25-03-22

**SSLC / HSE - FIRST YEAR / SECOND YEAR EXAMINATIONS, MARCH - 2020**

**DISTRICT WISE CO-ORDINATORS LIST**

| SL. No. | Revenue District Name | Name & Designation | Mobile No. |
|---|---|---|---|
| 1. | Nagercoil | S.Surenthiran, (Computer Instructor) | **94867 57471** |
| | | B.Ethaya Rajavarmam, (Computer Instructor) | **86104 93355** |
| 2. | Tirunelveli | P.Dinakaran, (Computer Instructor) | **94425 88439** |
| | | S.Venkatachala Perumal, (Computer Instructor) | **94429 08096** |
| 3. | Tuticorin | G. Sam Jeya Kingslin, (Computer Instructor) | **94865 28383** |
| | | M.S.Ponraj, (Computer Instructor) | **98948 35337** |
| 4. | Ramnad | M.Mohamed Riyaldeen (Computer Instructor) | **97916 05613** |
| | | S.Manimuthu, | **98424 70413** |
| 5. | Sivagagai | M.Thiagarajan, (Computer Instructor) | **94436 09200** |
| | | P.Kaleeshwaran, (Computer Instructor) | **99420 94463** |
| 6. | Virudhunagar | V.Rajakumar, (Computer Instructor) | **98656 35997** |
| | | P.Saravanan, (Computer Instructor) | **73733 00123** |
| 7. | | N.V. Maran,(Computer Instructor) | **99768 86032** |
| | Theni | S.Thangapandian, (Computer Instructor) | **88389 46148** |
| 8. | Madurai | T.Ravichandran, (Computer Instructor) | **94884 63683** |
| | | B.SenthilKumar, (Computer Instructor) | **99440 35456** |
| 9. | Dindigul | K.Prabhakaran, (Computer Instructor) | **98946 09765** |
| | | C.Ganeshbabu, (Computer Instructor) | **96988 58485** |
| 10. | Ooty | P.Gopi, (Computer Instructor) | **86681 48834** |
| | | S.Venugopal, (Computer Instructor) | **98434 63610** |
| 11. | Tiruppur | P.Venkadachalam, (Computer Instructor) | **79041 50182** |
| | | K.Palanisamy, (Computer Instructor) | **99421 99459** |
| 12. | Coimbatore | M.Kalaivanan, (Computer Instructor) | **98946 42231** |
| | | D.Karthick, (Computer Instructor) | **96291 02895** |
| 13. | Erode | R.Dhanasekaran, (Computer Instructor) | **98654 14488** |
| | | V. Ragunathan, (Computer Instructor) | **99651 79355** |
| 14. | Salem | S.Kannan (Vocational Teacher) | **99432 17399** |
| | | K.Ashok Kumar (Computer Teacher) | **94879 43661** |
| 15. | Nammakal | A.Gopinath, (Computer Instructor) | **98948 66061** |
| | | R.Venkateshwaran, (Computer Instructor) | **94438 92636** |
| 16. | Krishnagiri | C.Senthil Kumar, (Computer Instructor) | **99446 58758** |
| | | D.Thangaraj, (Computer Instructor) | **98438 78109** |

| | | | |
|---|---|---|---|
| 17. | Dharmapuri | R.K.Thirumayavan, (ComputerTeacher) | **94430 56252** |
| | | Periyasamy (Assistant) | **94456 66455** |
| 18. | Pudukottai | A.Balakrishnan (Computer Instructor) | **96260 73216** |
| | | P.Sridharan (Computer Instructor) | **94439 54569** |
| 19. | Karur | M.Rajkumar, (Vocational Teacher) | **97905 34789** |
| | | U.Boopathy, (Computer Instructor) | **98424 69399** |
| 20. | Ariyalur | T.Tamilarasan, (Computer Instructor) | **95859 54334** |
| | | K.Saravanan, (Computer Instructor) | **99421 45718** |
| 21. | Perambalur | A.ArulJothi, (Computer Instructor) | **94445 24521** |
| | | M.Senthil Kumar, (Computer Instructor | **82481 68728** |
| 22. | Trichy | C.Sakthivel, (ComputerTeacher) | **94437 90720** |
| | | N.Dhanasekar, (Computer Instructor) | **98434 66115** |
| 23. | Nagapattinam | S.Cheran, (Computer Instructor) | **98417 29479** |
| | | P.David Durairaj, (Computer Instructor) | **86819 32563** |
| 24. | Tiruvarur | S.HariKrishnan (Computer Instructor) | **98423 32859** |
| | | S. David Arokkiadoss (Computer Instructor) | **94868 05224** |
| 25. | Thanjavur | S.Ramesh Prakash, (Computer Instructor) | **98948 63248** |
| | | R.Devakumar, (Computer Instructor) | **94424 03022** |
| 26. | Villupuram | S.Karthirvel, (Computer Instructor) | **99653 25144** |
| | | K. SelvaMuthukumarasamy,(Computer Instructor) | **99440 71187** |
| 27. | Cuddalore | T.Peter Prem Kumar,(Computer Instructor) | **97894 55111** |
| | | M.Ravishankar, (Computer Instructor) | **98653 38113** |
| 28. | Puducherry | T.Manivannan | **98949 57332** |
| | | J.John Antony Prabhu | **98423 73646** |
| 29. | Tiruvannamalai | R.Divakar, (Computer Instructor) | **89401 16005** |
| | | C.Elango, (Computer Instructor) | **94893 33338** |
| 30. | Vellore | A.N.Mohammed Ali, (Computer Instructor) | **98945 08914** |
| | | G.Gopi, (Computer Instructor) | **70920 29001** |
| 31. | Kanchipuram | K.Selvakumar, (Computer Instructor) | **98655 71717** |
| | | R.Parasuraman, (Computer Instructor) | **94451 64816** |
| 32. | Tiruvallur | C.Lokesh, (Computer Instructor) | **91597 83787** |
| | | K.Panithra, (Computer Instructor) | **78719 91291** |
| | | P.K.JaiSankar, (Assistant), | **86106 93960** |
| 33. | Chennai | V.Srinivasan, (ComputerTeacher) | **94441 21621** |
| | | S.Kesavan, (ComputerTeacher) | **94448 51101** |